இன்றைய வேளாண் செய்திகள்

**முல்லைப் பெரியாறு அணை நீர்மடம் 140 அடியை எட்டியது**



முல்லைப்பெரியாறு அணைப் பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் 140 அடியை எட்டியது. அணையின் தற்போதைய நீர் இருப்பு- 7,126 மில்லியன் கன அடி; அணைக்கு நீர்வரத்து 1,916 கனஅடியாகவும் உள்ளது. முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வினாடிக்கு 456 கனஅடி நீர் பாசனத்திற்காக திறக்கப்பட்டு வருகிறது. தற்போதைய நிலையில் அங்கு வெள்ள அப்பாய எச்சரிக்கை விடுப்பது குறித்து தேனி, இடுக்கி ஆகிய இருமாவட்ட ஆட்சியர்களுக்கும் தகவல் கொடுத்துள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**லாபம் தரும் நிலக்கடலை விதை உற்பத்தி**



நிலக்கடலை விதையைப் பயிரிட்டால் குறைந்த செலவில் அதிக லாபத்தை விவசாயிகள் பெறலாம். தமிழ்நாட்டில் நிலக்கடலை சுமார் 22.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 6 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் நிலக்கடலை அதிக அளவில் பயிரிடப்படுகிறது. இதற்குத் தேவையான தரமான விதைகள் உரிய காலத்தில் கிடைப்பது இல்லை. ஆகையால், நிலக்கடலை விதை உற்பத்தி செய்வதின் மூலம் விவசாயிகள் அதிக வருமானம் பெறலாம். இது குறித்து காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் வேளாண்மை

அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் பெ. முருகன் கூறியதாவது: **விதைப்பும், விளைநிலம் தேர்வு செய்தல்:** நிலக்கடலை விதைப்புக்குச் சிறந்த பருவம் ஜுன் மாதம் முதல் ஜுலை வரையும் டிசம்பர் முதல் ஜனவரி வரையிலான மாதங்களே ஆகும். மேலும் இதற்கு நல்ல வளமான செம்மண்பாங்கான காற்றோட்டமும், வடிகால் வசதியும் உடைய நிலமாக இருக்க வேண்டும். மண்ணில் போரான், கால்சியம் குறைபாடு இல்லாமல் இருக்க வேண்டும். **ரகம் மற்றும் விதைத் தேர்வு:** டி.எம்.வி.-7, வி.ஆர்.ஐ.-2, டி.எம்.வி.-13, கோ - 6 விதைகளை வேளாண்மை பல்கலைக்கழகங்கள், மாநில விதை நிறுவனங்கள், மத்திய விதை நிறுவனங்கள், வேளாண் துறை இவைகளில் ஏதேனும் ஒன்றிலிருந்து பெற வேண்டும். விதைப்பதற்கு வெகுநாள் முன்னதாகவே விதைக்கடலையை தொலித்து வைக்கக்கூடாது. மேலும், கையினால் தொலிப்பது நல்லது. விதைப் பருப்புகளில் உடைந்த, நிறம் மாறிய, சுருங்கிய, சிறிய பருப்புகளை பிரித்து எடுத்து விட்டு நல்ல தரமான பருப்புகளையே விதைக்குப் பயன்படுத்த வேண்டும். விதைப்பதற்கு முன் முளைப்புத் திறனை சோதிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு சிறிய விதைகளை உடைய டி.எம்.வி.2, டி.எம்.வி.7, டி.எம்.வி.13 ஆகிய ரகங்கள் 50 கிலோ முதல் 55 கிலோ வரையும், பெரிய விதைகளை உடைய வி.ஆர்.ஐ.-2, ஜே.எல்.24, கோ - 6 ஆகிய ரகங்கள் 55 கிலோ முதல் 60 கிலோ வரையும் தேவைப்படும். **விதை முளைகட்டுதல்:** 2 கிலோ விதைக்கு 5 கிராம் கால்சியம் குளோரைடு எடுத்து இதனை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்துக் கொள்ளவும். அதுபோல 28 லிட்டர் கரைசல் தயார் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கரைசலில் விதையை 6 மணி நேரம் ஊற வைக்கவேண்டும். பிறகு இக்கரைசலில் ஊற வைத்த விதைகளை ஈரச்சாக்கின் மீது பரப்ப வேண்டும். அதனை மற்றொரு ஈரச்சாக்குக் கொண்டு 12 மணி நேரம் மூடி வைக்க வேண்டும். அதற்குப் பிறகு விதையில் கருமுளை வெளிவந்திருக்கும். இவ்வாறு முளை கண்ட விதைகளை பிரித்தெடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். மிக நீளமாக முளைக்கரு வெளிவந்த விதைகளையும் இறந்த விதைகளையும் தனியே பிரித்து எடுத்து விடவும்.

**விதை நேர்த்தி:** நிலக்கடலையில் விதை மூலமும், மண்மூலமும் பரவும் வேர் அழுகல், தண்டு அழுகல், இலைப்புள்ளி நோய்களைக் கட்டுப்படுத்தவும், பயிர் எண்ணிக்கையைச் சீராகப் பராமரிக்கவும் உயிரியல் பூஞ்சாணக் கொல்லிகளான டிரைக்கோடெர்மா விரிடியைக் 1 கிலோ விதைக்கு 4 கிராம் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். காற்றில் கரைந்துள்ள நைட்ரஜன் சத்தை பயிருக்கு அளிக்க டி.என்.ஏ.யூ.14 ரைசோபியம் (3 பாக்கெட் - 200 கிராம்) என்ற நுண்ணுயிரைக் கொண்டும் விதைக்கு, விதை நேர்த்தி செய்து பின்னர் விதைக்கவேண்டும்.

**நிலம், பயிர் விலகு தூரம்:** விதை உற்பத்திக்கு தேர்ந்தெடுத்த நிலத்தை 4 முதல் 5 முறை நன்கு உழவு செய்து மண் கட்டிகளை உடைக்க வேண்டும். கடைசி உழவுக்கு முன் ஒரு ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரம் இடவேண்டும். மண்ணின் தன்மை, நீர்ப் பிடிப்பு ஆகியவற்றைப் பொருத்து பாத்திகள் அமைத்துக் கொள்ள வேண்டும். நிலக்கடலை ஒரு தன் மகரந்த சேர்க்கைப் பயிராகும். ஆகையால் ஒரு ரக நிலக்கடலை விதை பயிருக்கும், மற்றொரு ரக நிலக்கடலை விதை பயிருக்கும் குறைந்த பட்சம் 3 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.

**பயிர் இடைவெளி:** விதை விதைக்கும்போது வரிசைக்கு வரிசை 30 செ.மீ. செடிக்குச் செடி 10 செ.மீ. இடைவெளி இருக்குமாறு விதைக்க வேண்டும். விதைக்கப்படும் விதை 4 செ.மீ. ஆழத்துக்கு கீழே சென்றுவிடக் கூடாது. ஒரு சதுர அடிக்கு 33 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். **உர நிர்வாகம்:** ஒரு ஏக்கருக்கு ஜிப்சம் 80 கிலோ, தொழு உரம் 5 டன், அடியுரமாக தழைச்சத்து 10 கிலோ, மணிச்சத்து 20 கிலோ, சாம்பல் சத்து 30 கிலோ உரங்களை இடவேண்டும். இத்துடன் போராக்ஸ் 4 கிலோ, நுண்ணூட்டக் கலவை 5 கிலோவும் விதைப்பு முடிந்தவுடன் நிலத்தின் மேல் இடவேண்டும். செடிகள் நன்கு வளர்ந்து அதிக காய்கள் பிடித்து மகசூலை அதிகரிக்க விதைத்த 25-35 நாள்களில் பூக்கும் தருணத்தில் பசஅம நிலக்கடலை ரிச் 2.2 கிலோவுக்கு 200 லிட்டர் நீர் ஊட்டச்சத்து தெளிக்கவும்.

**களை நிர்வாகம்:** நிலத்தில் உள்ள பயிர்ச்சத்து வீணாகாமல் தவிர்க்கவும், களைகள் மூலம் மண், ஈரம் விரயமாவதைத் தவிர்க்கவும், பயிர்களுக்கு போதிய சூரிய ஒளி கிடைக்கவும், பூச்சி நோய்கள் பரவாமல் தடுத்து அதிக விளைச்சல் பெறுவதற்கும் ஒரு ஏக்கருக்கு புளுகுளோரலின் களைக் கொல்லியை 800 மில்லி என்ற அளவில் விதைத்த 3 நாள்களுக்குள் நிலத்தில் தெளித்து களைகளைக் கட்டுப்படுத்தலாம். விதைத்த 45-ஆம் நாள் மண் அணைக்க வேண்டும். மண் அணைப்பதால் விழுதுகள் எளிதில் மண்ணில் இறங்குவதற்கு ஏதுவாகி, செடியில் அதிக எண்ணிக்கையில் காய்கள் பிடிக்கும். **ஜிப்சம் இடுதல்**: ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை விதைக்க 40 முதல் 45-ஆம் நாள் கழித்து செடிகளைச் சுற்றி மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தில் சுண்ணாம்புச் சத்தும், கந்தகச் சத்தும் அடங்கி உள்ளன. சுண்ணாம்புச் சத்து காய்கள் திறட்சியாகவும், அதிக எடை உடையதாகவும் உருவாக வழி செய்கிறது. கந்தகச் சத்து நிலக்கடலையில் எண்ணெய்ச்சத்தை அதிகரிக்கிறது. **நீர் நிர்வாகம்:** விதை உற்பத்தியில் வயலில் களைகள் அதிகமாக பெருகுவதைத் தடுக்கவும், பூச்சி நோய் கட்டுப்பாட்டிற்கும் செடிகள் நன்கு வேரின்றி காய் உருவாகவும் நீர் நிர்வாகம் மிக முக்கியமாகும். நிலக்கடலை விதை உற்பத்தியில் நீர் பாய்ச்ச வேண்டிய முக்கிய நிலைகள் விதைக்கும் சமயம், உயிர்த் தண்ணீர் விதைத்த 4 முதல் 5-வது நாள், விதைத்த 20 முதல் 22-ஆம் நாள், விழுது இறங்கும் சமயம், காய்பிடிப்பு, முதிர்ச்சி தருணத்தில் நீர் பாய்ச்ச வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு:** பூச்சி, நோய்களின் தாக்குதல் தென்பட்டவுடன் பூச்சி, பூஞ்சாணக் கொல்லி மருந்துகளை தெளித்துக் கட்டுப்படுத்துவதன் மூலம் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம். **பூச்சிக் கொல்லிகள், சாறு உறிஞ்சும் பூச்சிகள்:** இலைப்பேன், தத்துப்பூச்சி, அசுவினி - இமிடாகுளோப்ரிட் - 100 மி.லி. (அ) டைமெத்தோயேட் - 1000 மி.லி. சுருள் பூச்சி - டைமெத்தோயேட் - 1000 மி.லி. இலைகளைக் கடித்து உண்ணும் பூச்சிகள் (புரோடினியா புழு, பச்சைப் புழு, சிகப்பு கம்பளிப்புழு) ஸ்பைனாசாட் - 150 மி.லி. (அ) இன்டாக்ஸாகார்ப் - 250 மி.லி. (அ) மெத்தோமில் - 100 கிராம் துருநோய், இலைப்புள்ளி நோய் ஆகிய நோய்களுக்கு கார்பெண்டசிம் - 500 கிராம் (அ) மான்கோசெப் - 1000

கிராம் பூஞ்சாணக் கொல்லி ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். **கலவன் நீக்குதல்:** 2 அல்லது 3 முறை கலவன் பயிர்களை நீக்க வேண்டும். மெலிந்த, நோய்கள் தாக்கிய, மாறுபட்ட குண அதிசயங்களைக் கொண்ட, வரிசையிலிருந்து தள்ளி முளைத்த செடிகளை அகற்ற வேண்டும். பூக்கும் தருணத்தில், மாறுபட்ட செடி அமைப்பு, மாறுபட்ட பூவிதழ்கள், மாறுபட்ட கிளை அமைப்பு கொண்ட செடிகளை அகற்ற வேண்டும். காலதாமதமாக பூக்கும் செடிகளையும் அகற்ற வேண்டும். அறுவடை செய்யும் போது, நோய்களினால் பாதிக்கப்பட்ட காய்கள் உள்ள செடிகள், மாறுபட்ட காய் அமைப்பு கொண்ட செடிகளை அகற்ற வேண்டும். **விதை அறுவடை மற்றும் சேமிப்பு:** சரியான தருணத்தில் அறுவடை செய்வது தரமான விதை உற்பத்தியில் மிக முக்கிமான பணியாகும். உரிய காலத்தில் திட்டமிட்டு அறுவடை செய்வதினால் நிலக்கடலையில் அறுவடை சேதாரத்தை கட்டுப்படுத்தலாம். நுனி இலை மஞ்சளாக மாறுதல், அடி இலைகள் காய்ந்து உதிர்வது பயிர் முதிர்ச்சி அடைந்தற்கு அறிகுறியாகும். சில செடிகளைப் பிடுங்கி காய்களை உடைத்துப் பார்த்தால் தோலின் உட்பாகம் கரும்பழுப்பு நிறமாக இருக்கும். பிறகு செடிகளை பிடுங்கி சேகரித்தவுடன், காய்களை செடியிலிருந்து பிரித்தெடுக்கவேண்டும். அறுவடையின்போது காய்களில் கிட்டத்தட்ட 35 சதவீதம் முதல் 40 சதவீத ஈரப்பதம் இருக்கும். காய்களை 2 அல்லது 3 நாட்கள் நன்கு வெயிலில் உலர்த்த வேண்டும். காய்களை 12 சதவீத ஈரப்பதம் வரும் வரை காய வைக்கலாம். இவ்வாறு உலர்த்திய காய்களை நல்ல பைகளில் சேமித்து வைக்க வேண்டும். **விதை மகசூல்:** இறவையில் ஒரு ஏக்கருக்கு நிலக்கடலை காய்கள் 900 கிலோ முதல் 1,100 கிலோ மகசூல் தரவல்லது. விதை உற்பத்திக்கு விதைச் சான்று, விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உற்பத்தி செய்யப்படும் விதையின் இனத்தூய்மை பற்றியும் விதைத்தரம் பற்றியும் உத்தரவாதம் அளிப்பதே விதைச் சான்றளிப்பு ஆகும். மாநில விதைச்சான்று துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தை சமர்பிக்க வேண்டும். பயிர் பூக்கும் பருவத்திலிருந்து அறுவடைக்குள் 2 முறை விதைச் சான்று அலுவலர்களால் வயல் ஆய்வு செய்யப்பட வேண்டும். ஆய்வின்போது

பரிந்துரைக்கப்பட்ட வயல், விதைத் தரம் இருந்தால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்ட விதைகளுக்கு சான்றளிக்கப்பட்டு அவை விற்பனைக்கு தயாராகும். எனவே உங்கள் விதை உற்பத்தி வயல்கள் விதைச் சான்றளிப்புக்கு உட்படுத்தி இனக்கலப்பற்ற தரமான விதைகளை உற்பத்தி செய்ய முடியும். விதைச்சான்று பெறுவதற்கு அருகாமையில் உள்ள விதைச் சான்றளிப்பு அலுவலர்களை அணுகி மேலும் விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 044 - 2745 2371 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

## <u>பழனி பகுதி அணைகள் உலகவங்கி மற்றும் அணை பாதுகாப்பு குழு அதிகாரிகளால் ஆய்வு</u>

பழனியை சுற்றியுள்ள அணைகளில் தற்போது நீர் நிறைந்துள்ள நிலையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் வகையில் உலக வங்கி மற்றும் அணை பாதுகாப்பு அதிகாரிகள் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர். பழனியை சுற்றிலும் பாலாறு, பொருந்தலாறு அணைகள், வரமாநதி அணைக்கட்டு, குதிரையாறு அணை, பரப்பலாறு அணை போன்றவை உள்ளன. சமீபத்திய மழையால் இந்த அணைகள் தற்போது நிரம்பி கடல்போல காட்சியளிக்கிறது. ஆனால் அணைகளில் பல இடங்களிலும் தடுப்புச்சுவர் உடைந்தும், நீர் வடியும் பகுதிகளில் சேதங்களும் ஏற்பட்டுள்ளது. ஷட்டர்களிலும் தொடர்ந்து பழுது ஏற்பட்டு வருகிறது. தவிர, அணைகளில் பூங்காக்கள் முற்றிலும் பராமரிப்பின்றி உள்ளது. இதுகுறித்து விவசாயிகளும், தன்னார்வ அமைப்பினரும் தொடர்ந்து புகார் தெரிவித்து வந்த நிலையில் அணைகளின் பராமரிப்பு குறித்தும், அணைகளை பலப்படுத்தி பாதுகாப்பது குறித்தும் டெல்லியில் இருந்து உலக வங்கி அதிகாரிகள் வினோத்குமார் சர்மா, சந்திரசேகர மாத்தூர் மற்றும் அணை பாதுகாப்பு அதிகாரிகள் பிரசாத், ராஜசேகர் உள்ளிட்டோர் பழனியை சுற்றியுள்ள அணைகளை ஆய்வு செய்தனர். ஆய்வுகள் முடித்த அதிகாரிகள் தெரிவித்ததாவது, பழனியை சுற்றியுள்ள அணைகளை ஆய்வு செய்த வகையில் அணைகளை பலப்படுத்தவும், பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளும் விதத்தில் சுமார் ரூ.26 கோடி மதிப்பில் பணிகள் வரும் ஜனவரி மாதத்துக்கு மேல் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தனர். பாலாறு பொருந்தலாறு அணைக்கு ரூ.2

கோடியிலும், பரப்பலாறு அணைக்கு ரூ.20 கோடி மதிப்பிலும், குதிரையாறு அணைக்கு ரூ. ஒரு கோடி மதிப்பிலும், குடகனாறு அணைக்கு ரூ.3.8 கோடி மதிப்பிலும் பணிகள் மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆய்வின் போது பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ஜெயப்பிரகாஷ், செயற்பொறியாளர் திருச்செந்தில்வேலன், உதவி செயற்பொறியாளர் முருகன், உதவிப்பொறியாளர் வினோத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## <u>கனமழை: வீராணம்ஏரிக்கு கூடுதல் நீர்வரத்து, அண்ணாமலைநகரில் அதிகபட்ச மழை</u>




சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் கடந்த இரு தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. வீராணம்ஏரிக்கு கூடுதல் நீர் வருவதால், உபரி நீர் வெள்ளாற்றில் வெளியேற்றப்படுகிறது. வியாழக்கிழமை மட்டும் அண்ணாமலைநகரில் அதிகபட்சமாக 53.40 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. வீராணம்ஏரிக்கு கூடுதலாக நீர்வரத்து: கனமழை பெய்து வருவதால் காட்டுமன்னார்கோயில் அருகே உள்ள கடலூர் மாவட்ட மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய ஏரியான வீராணம்ஏரிக்கு கூடுதலாக நீர் வருகிறது. வீராணம்ஏரிக்கு வடவாறு வழியாக விநாடிக்கு 500 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. கூடுதலாக வரும் உபரிநீர் சேத்தியாத்தோப்பு விஎன்எஸ் அணைக்கட்டு வழியாக வெள்ளாற்றில் வெளியேற்றப்படுகிறது. ஏரியிலிருந்து விநாடிக்கு 74 கனஅடி சென்னை குடிநீர் வாரியத்திற்கு அனுப்பப்படுகிறது. ஏரியின் மொத்தக் கொள்ளளவு 47.50 அடியாகும். ஏரியின் பாதுகாப்பு நலன் கருதி ஏரியில் 44.60 அடி நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் பெய்துள்ள மழை விபரம்: சிதம்பரம்- 38 மிமீ, பரங்கிப்பேட்டை- 36 மி.மீ, காட்டுமன்னார்கோயில்- 30 மி.மீ, அண்ணாமலைநகர்-53.40 மிமீ, சேத்தியாத்தோப்பு- 19 மி.மீட்டர், புவனகிரி- 36 மிமீ. லால்பேட்டை- 33

மிமீட்டர்.

## தமிழகத்தில் 9 மாவட்டங்களில் சராசரியைவிட அதிக மழை

தமிழகத்தில் ஒன்பது மாவட்டங்களில் சராசரி அளவைவிட, அதிக மழை பெய்துள்ளதாக வருவாய்த் துறை தெரிவித்துள்ளது. தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையால் பாதித்துள்ள பகுதிகளுக்கு நிவாரணப் பணிகளை அளிப்பது தொடர்பாக, வருவாய்த் துறை புதன்கிழமை ஆலோசனை நடத்தியது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் குறித்து வருவாய்த் துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி வெளியிட்ட அறிவிப்பு: கடந்த அக்டோபரில் தொடங்கிய வடகிழக்குப் பருவமழை, திருநெல்வேலி, ஈரோடு, தூத்துக்குடி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தருமபுரி, நாகப்பட்டினம், உதகை ஆகிய 9 மாவட்டங்களில் வழக்கமாக பெய்யும் சராசரி அளவைவிட, அதிகளவு பெய்துள்ளது. குறிப்பாக, திருநெல்வேலி, ஈரோடு மாவட்டங்களில் 50 சதவீதம் கூடுதலாக மழை பெய்துள்ளது. கோவை, ராமநாதபுரம், திருவாரூர், சென்னை, சிவகங்கை, சேலம், கிருஷ்ணகிரி, கடலூர், புதுக்கோட்டை, மதுரை, விருதுநகர், விழுப்புரம், தஞ்சாவூர், பெரம்பலூர், நாமக்கல், கரூர் ஆகிய 16 மாவட்டங்களில் இயல்பான அளவு மழை பெய்துள்ளது. பருவ மழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சீர்செய்ய ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில், நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ.30 கோடியும், பொதுப்பணி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளுக்கு தலா ரூ.10 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## செவ்வந்திப் பூக்கள் விளைச்சல் அமோகம்: நத்தம் பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி

நத்தம் பகுதியில் செவ்வந்திப் பூக்களின் அமோக விளைச்சலால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நத்தம் அருகே செந்துறை, திருநூத்துப்பட்டி, தொண்டபுரி, குடகிபட்டி, பிள்ளையார்நத்தம், அடைக்கனூர், மணக்காட்டூர், மங்களப்பட்டி, சிரங்காட்டுப்பட்டி, குரும்பபட்டி, கோசுகுறிச்சி உள்ளிட்ட பல பகுதிகளில் தோட்டப் பயிர்களாவும், இரவை சாகுபடியாகவும், மானவாரியாகவும், செவ்வந்தி பூ

சாகுபடி செய்யப்படுகிறது. இந்தப் பூவானது, வெள்ளை, மஞ்சள், சிவப்பு நிறங்களில் பூக்கிறது. இதை, மஞ்சள் செவ்வந்தி பூ, சாமந்திப் பூ, வெள்ளை செவ்வந்திப் பூ என பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். மேலும், இந்தப் பூக்கள் மருத்துவ குணங்கள் நிறைந்தது. இதனால், தமிழகத்தின் அதிக பகுதிகளில் இப் பூ சாகுபடி செய்யப்படுகிறது. இது, தோட்டத்தில் பூத்துக் குலுங்கி கண்களைக் கவரும் வகையில் வளர்ந்து, மனதுக்கு இனிய ஒரு அரிய நறுமணத்தையும் வெளிப்படுத்துகிறது. தற்போது அறுவடையாகும் இந்தப் பூக்கள், திண்டுக்கல், மதுரை, திருச்சி உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு செந்துறையில் இருந்து அனுப்பி வைக்கப்படுகிறது. நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் அறுவடை யாகும் இந்தப் பூக்கள், சாதாரண நாளில் கிலோ ரூ. 70-க்கும், விழாக் காலம் மற்றும் முகூர்த்த நாள்களில் ரூ. 100 வரையும் விற்பனையாகிறது. தற்போது பெய்த பருவ மழையினால், இந்தப் பூக்கள் அதிக அளவில் பூத்துக் காணப்படுவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது: ஆட்சியர்</u>

மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளின் மூலம், திண்டுக்கல் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதாக மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியது: நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் வகையில், மழைநீர் சேகரிப்பு திட்டத்திற்கு தமிழக அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், திண்டுக்கல் மாவட்டத்தின் பல பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 1000 அடிக்கு கீழே குறைய தொடங்கியது. இதனை அடுத்து, மாவட்டம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை செயல்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மாவட்டத்தில் உள்ள 306 ஊராட்சி அலுவலகங்கள் மற்றும் அந்தந்த பகுதிகளில் உள்ள வீடுகளிலும், 100 சதவீதம் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில், வடகிழக்கு பருவமழை மூலம் அக்டோபரில் மட்டும் திண்டுக்கல் மாவட்டத்திற்கு 347 மி.மீட்டர் மழைப் பொழிவு கிடைத்துள்ளது. மழைநீர்

சேகரிப்பு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதன் மூலம், மழைநீர் வீணாகாமல் நிலத்தடியில் சேமிக்கப்பட்டது. இதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் சராசரியாக 20அடி முதல் 100அடி வரை உயர்ந்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் சிறுமலை பகுதிகளில், வனத்துறையின் மூலமாக சுமார் 350க்கும் மேற்பட்ட தடுப்பணைகள், 150க்கும் மேற்பட்ட கசிவுநீர் குட்டைகள், 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட நீர் தேக்க குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் மலைப்பகுதிகளில் பெய்த மழைநீர் முழுமையாக சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் பயன் பெறும் வகையில் மாவட்டத்தில் 2000 பண்ணைக் குட்டைகளும், 250 சிறிய தடுப்பணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலமும் நிலத்தடி நீர் மட்டம் உயர்த்துள்ளது. எனவே தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு, எதிர்வரும் காலங்களிலும் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைப்பதில் பொதுமக்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## <u>ராமேசுவரத்தில் மூன்றாவது நாளாக கன மழை</u>

ராமேசுவரத்தில் 3ஆவது நாளாக பெய்த கன மழையால் சாலைகளில் வெள்ளம் போல் தேங்கிய மழை நீரால் வாகன ஓட்டிகள் அவதியடைந்துள்ளனர். வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானதையொட்டி, கடலோரப்பகுதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்புகள் உள்ளதாக வானிலை மையம் எச்சரித்திருந்தது. அதனையொட்டி ராமேசுவரம் கடலோரப்பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு துவங்கிய மழை மூன்றாவது நாளாக வியாழக்கிழமையும் பெய்தது. தொடர் மழையால் ராமேசுவரம் நகராட்சி அலுவலகம், ராமர்தீர்த்தம் ஆகிய பகுதிகளில் சாலையில் மழை நீர் வெள்ளமாகத் தேங்கியது. இதனால் வாகனங்களும், பொதுமக்களும் கடந்து செல்ல முடியாமல் ஊர்ந்து சென்றன. மேலும் இடைவிடாமல் தொடர்ந்து பெய்யும் மழையால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

## கொடிவேரி அணையில் இருந்து 2-ஆம் போக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பு

ஈரோடு மாவட்டம், கோபி அருகே, கொடிவேரி அணையில் இருந்து இரண்டாம் போக சாகுபடிக்கு வியாழக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் தண்ணீரைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகரன் தலைமை வகித்தார். திருப்பூர் மக்களவை உறுப்பினர் வி.சத்தியபாமா, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் எஸ்.ஆர்.செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொடிவேரி அணையின் இடதுபுறம் அரக்கன்கோட்டை கால்வாயும், வலதுபுறம் தடப்பள்ளி கால்வாயும் அமைந்துள்ளன. கொடிவேரி அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் மூலமாக இரண்டு கால்வாய்களின் பாசனப் பகுதிகளான கோபி, அந்தியூர் வட்டங்களை சேர்ந்த 24,504 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனவசதி பெறும். 135 நாள்களுக்கு தொடர்ச்சியாக தண்ணீர் விடப்படும். இந்நிகழ்ச்சியில், கோபி சார் ஆட்சியர் ஹெச்.கிருஷ்ணன் உண்ணி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சிறுவலூர் மனோகரன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் பி.வி.தங்கம் (கோபி), சுப்புலட்சுமி அய்யாசாமி (சத்தி), சத்தியமங்கலம் நகர்மன்றத் தலைவர் ஓ.எம்.சுப்ரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர்.

## நடவு முறை துவரை நாற்றங்கால்: வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு

போளூர் ஒன்றியம் ஜடதாரிகுப்பத்தில் நடவு முறை துவரை நாற்றங்காலை வேளாண்மை இணை இயக்குநர் ஜெயசந்திரன் புதன்கிழமை ஆய்வு செய்தார். போளூரை அடுத்த எழுவாம்பாடி ஊராட்சியைச் சேர்ந்த ஜடதாரிகுப்பம் கிராமத்தில் நடவு முறை துவரை நாற்றங்காலை விவசாயி குப்பன் என்பவர் தனது நிலத்தில் நடவு செய்ய போளூர் வேளாண்மைத் துறை சார்பில் விதை பெற்று பயிர் செய்திருந்தார். இந்த நடவு முறை துவரை நாற்றங்காலை வேளாண்மை இணை இயக்குநர் ஜெயச்சந்திரன் ஆய்வு செய்தார். வேளாண்மை உதவி

இயக்குநர் வடமலை, வேளாண்மை உதவி அலுவலர்கள் சித்ரா, ராஜாராம் ஆகியோர் உடனிருந்தனர்.

## நவ.21-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (நவ.21) நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் நிலப் பிரச்னைகள் குறித்துப் பேச மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாதாந்திர விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் தலைமையில் வெள்ளிக்கிழமை (நவ.21) காலை 10.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று விவசாயம் சார்ந்த பிரச்னைகளை நேரடியாகவோ, மனுக்கள் மூலமாக தெரிவிக்கலாம். இதில் பங்கேற்கும் விவசாயிகள் நிலம் தொடர்பான பிரச்னைகளை கூட்டத்தில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். பட்டா மாறுதல், பாதை தகராறு, ஆக்கிரமிப்பு என்பன உள்ளிட்ட நிலம் சார்ந்த பிரச்னைகளுக்காக செவ்வாய்க்கிழமை (நவ.18) மாலை 3.30 மணிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தனியாக கூட்டம் நடைபெற உள்ளது. அந்த கூட்டத்தில் நிலம் சார்ந்த பிரச்னைகளை மனுக்களாக அளித்து தீர்வு காணலாம். விவசாய குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் மட்டுமே பங்கேற்க வேண்டும். மேலும், விவசாயம் தொடர்பாக பிரச்னைகள், கோரிக்கை தொடர்பான கோரிக்கை மனுக்களை அளித்து தீர்வுகாண வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயிர்க் காப்பீடு செய்ய நாளை கடைசி நாள்

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடிப் பயிர்களுக்கு விவசாயிகள் காப்பீடு செய்ய சனிக்கிழமை (நவ. 15) கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து திருவாரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கடன் பெறாத பெரிய விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.12,800-க்கு இன்சூரன்ஸ் செய்ய ரூ. 128, கடன் பெறாத சிறு குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 12,800-க்கு இன்சூரன்ஸ் செய்ய ரூ. 115 பிரிமீயத் தொகை செலுத்த வேண்டும். இதில் அரசு 50 சதவீதம் தொகையை கடன் பெறாத பெரிய விவசாயிகளுக்கும், 55 சதவீதம் தொகையை கடன் பெறாத சிறு குறு விவசாயிகளுக்கும் மானியமாக வழங்குகிறது. கூடுதலாக ஏக்கருக்கு ரூ. 11,200-க்கு இன்சூரன்ஸ் செய்ய விரும்பும் கடன் பெறாத விவசாயிகள் கூடுதல் பிரீமியமாக ரூ. 2,688 தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம். பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று முன்மொழிவு படிவத்துடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் அல்லது சேவைப் பகுதி வணிக வங்கிகளில் பிரீமியத் தொகையை செலுத்தலாம். முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் அல்லது வணிக வங்கிகளில் பெற்றுக் கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகளுக்கு நவ. 15-ம் தேதி பிரீமியம் செலுத்த கடைசி நாள் என்பதால் விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். இதேபோல், விவசாயிகள் அனைவரும் பயிர்க் காப்பீடு செய்ய வேண்டும் என இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு மாநில செயலர் வெ. சத்யநாராயணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

## <u>மூங்கில் கன்றுகள் நடவுப் பணி</u>

விழுப்புரம் மாவட்டத்தில், மூங்கில் வளர்ப்பை அதிகப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, மூங்கில் கன்றுகள் நடவு செய்யும் பணி விழுப்புரம் தோட்டக்கலை சார்பில் நடைபெற்றது. விவசாயிகளிடம் முள்ளில்லா மூங்கில் சாகுபடி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழுப்புரம் தோட்டக் கலை சார்பில் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் திருப்பாச்சனூர் கிராமத்தில் மூங்கில் சாகுபடி நடவு விழா அண்மையில் நடைபெற்றது. விழுப்புரம் கோட்டாட்சியர் அனுசுயாதேவி தலைமை வகித்து நடவுப் பணியை துவக்கி வைத்தார். தொடர்ந்து ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் வெண்கலம் கிராமம், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம் மேலதாழனூர், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம் ஒலக்கூரில் 10 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.80ஆயிரம் மானியத்தில்

மூங்கில் கன்றுகள் நடவு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் விழுப்புரம் தோட்டக்கலை துணை இயக்குநர் க.வீராசாமி, தோட்டக்கலை அலுவலர் முருகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் பரமசிவம், சிவராமன் ஆகியோர் பங்கேற்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் மானாவாரி நிலங்களில் பாம்பூசா பல்கூவா, பாம்பூசா வல்காரிஸ், பாம்பூசா நூடன்ஸ், பாம்பூசா டுல்டா, பாம்பூசா முக்கல்பா போன்ற முள்ளில்லா மூங்கில் ரகங்களை பயிரிடலாம். ஒருமுறை நடவுக்கு பின்னர் 4ஆவது ஆண்டிலிருந்து 35 ஆண்டுகள் வரை அறுவடை செய்ய முடியும். முள்ளில்லா மூங்கில் காகிதம் தயாரிக்கவும், எரிசக்தி மூலம் மின்சாரம் தயார் செய்வதற்கும் பயன்படுவதால் தேவை எப்போதும் உள்ளது. சாதாரண தொழில் நுட்பத்தில் ஏக்கருக்கு 4 ஆண்டுகளுக்கு ரூ.10 ஆயிரமும், அதிநவீன தொழில்நுட்பத்தில் ரூ.50 ஆயிரம் மட்டுமே செலவாகும். எனவே, விவசாயிகள் மூங்கில் சாகுபடியில் கவனம் செலுத்தலாம் என்று தோட்டக்கலை துணை இயக்குநர் க.வீராசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

காஞ்சிபுரம் மாவட்டத்தில், தொடர்ந்து இரு தினங்களாக பெய்து வரும் மழையால், நீரின்றி கருகி வந்த மானாவாரி நெற்பயிர்களுக்கு, புத்துயிர் அளித்தது போல் உள்ளது என, விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வங்க கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கடந்த இரு நாட்களாக, கடலோர பகுதிகள், மேக மூட்டத்துடன் காணப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த இரண்டு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மாவட்டத்தில் அதிகபட்சமாக மாமல்லபுரத்தில் 92.60 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாமல்லபுரம், செங்கல்பட்டு, கேளம்பாக்கம், உத்திரமேரூர், திருக்கழுக்குன்றம் ஆகிய

பகுதிகளில் மழை நீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடியது. நேற்று முன்தினம் காலை முதலே காஞ்சிபுரம் மாவட்டத்தில், விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. அன்று நள்ளிரவு பலத்த மழை நீடித்தது. இதனால், மாவட்டத்தில் அனைத்து பள்ளி, கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டது. சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. பகுதிவாசிகள் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. புதுப்பட்டினம், கூவத்தூர் உட்பட கடலோர பகுதிகளில் லேசான மழை பெய்தது. அன்று மாலை கன மழை துவங்கி நேற்று பகலிலும் நீடித்தது. சுற்றுலா பயணிகள் இன்றி, மாமல்லபுரம் வெறிச்சோடியது. விவசாயம், மீன்பிடி தொழில் ஆகியவை முடங்கியது. வாலாஜாபாத் ஒன்றியம் கரூர், கோவிந்தவாடி, ராஜகுளம், சிங்காடிவாக்கம், சின்னிவாக்கம், புத்தகரம் ஆகிய கிராமங்களில் பெரும்பாலான விவசாயிகளின் நெற்பயிர், தண்ணீரின்றி வாடி வந்தன. இந்நிலையில், மாவட்டத்தில், கடந்த இரு தினங்களாக பரவலாக மழை பெய்து வருவதால், தண்ணீர் இன்றி கருகி வந்த நெற்பயிர்களுக்கு புத்துயிர் பெற்றுள்ளன. இது, விவசாயி களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து, கரூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், 'வட கிழக்கு பருவ மழை பொய்த்துவிட்டது என, நினைத்து வாடிய நெற்பயிரில் மாடு மேய்வதற்கு விடுவது என, முடிவு செய்திருந்தோம். அதற்குள் மழை வந்தது எங்கள் வயிற்றில் பாலை வார்த்தது போல், மகிழ்ச்சி அளிக்கிறது' என்றனர்.

**<u>சோழவரத்தில் அதிகபட்சமாக 113 மி.மீ., மழை</u>**

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்டத்தில், பரவலாக பெய்த மழையில், சோழவரத்தில் அதிகபட்சமாக, 113 மி.மீ., மழையும், குறைந்தபட்சமாக பள்ளிப்பட்டில், 20 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் காலை முதல், நேற்று வரை பரவலாகவும், தொடர்ச்சியாகவும் மழை பெய்து வருகிறது. இதையொட்டி, மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகள் நேற்று விடுமுறை விடப்பட்டன. இந்நிலையில், நேற்றுமுன்தினம் பெய்த மழையில் அதிகபட்சமாக சோழவரத்தில் 113

மி.மீ., மழையும், குறைந்தபட்சமாக பள்ளிப்பட்டில், 20 மி.மீ., மழையும் பதிவாகியது. மாவட்டத்தில் பெய்த மழை விவரம்:

இடம் மழை அளவு (மி.மீ.,)

சோழவரம் 113

தாமரைப்பாக்கம் 100

பூண்டி 96

பொன்னேரி 92

பூந்தமல்லி 92

செங்குன்றம் 90

செம்பரம்பாக்கம் 82

அம்பத்துார் 80

திருவாலங்காடு 58

திருவள்ளூர் 55

திருத்தணி 51

கும்மிடிப்பூண்டி 47

ஆர்.கே.பேட்டை 43

ஊத்துக்கோட்டை 36

பள்ளிப்பட்டு 20

**<u>சாத்தனுார் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்பு</u>**

திருக்கோவிலுார்: தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்வதால் சாத்தனுார் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனுாரில் அணை உள்ளது. இது

நிரம்பினால் விழுப்புரம், கடலூர் மாவட்ட விவசாயிகள் பயனடைவர். வடகிழக்கு பருவமழை காலத்திலேயே இது தனது முழு கொள்ளள வான 119 அடியை (7321 மில்லியன் கன அடி) எட்டும். பருவ மழை துவங்கி ஒன்றரை மாதங்கள் ஆகிவிட்ட நிலையில் நேற்று காலை நிலவரப்படி 81.30 அடி, அதாவது 1621 மில்லியன் கன அடி நீர் உள்ளது. அனைக்கு விநாடிக்கு 50 கன அடி நீர் வந்தது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான கிருஷ்ணகிரி பகுதி களில் நேற்று முதல் மழை பெய்வதால் கே.ஆர்.பி., அணையில் இருந்து வெளி யேற்றும் தண்ணீருடன் மழை நீரும் சேர்ந்து சாத்தனூர் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு அதிகரிக்கும் என பொதுப் பணித் துறை அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். சாத்தனூர் அணை நிரம் பினால் மட்டுமே விழுப்புரம், கடலூர் மாவட்ட விவசாயிகள் தண்ணீர் தேவையை ஓர் ஆண்டிற்கு தடையின்றி பெறமுடியும்.

## திண்டிவனம் பகுதியில் கொட்டித் தீர்த்தது மழை

விழுப்புரம்: திண்டிவனம் பகுதியில் மாவட்ட அளவில் அதிகபட்சமாக 61 மி.மீ., மழை பெய்தது. விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன் தினம் காலை முதல் நேற்று காலை வரை பெய்துள்ள மழை அளவு விவரம்: திண்டிவனத்தில் 61 மி.மீ., செஞ்சி 7.5 மி.மீ., திருக்கோவிலூர் 21 மி.மீ., விழுப்புரம் 17 மி.மீ., உளுந்தூர்பேட்டை 16 மி.மீ., வானூர் 33 மி.மீ., சங்கராபுரம் 13 மி.மீ., கள்ளக்குறிச்சி 12.50 மி.மீ., மரக்காணம் 46 மி.மீ., அளவு மழை பெய்துள்ளது. திருவெண்ணெய்நல்லூர் அடுத்த எல்லீஸ் அணைக்கட்டு பகுதியில் 30 மி.மீ., மழை பதிவானது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 239 மி.மீ., அளவும், சராசரியாக 26. 56 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது.

## மழையால் கோமுகி அணையிலிருந்து 1000 கன அடி நீர் வெளியேற்றம்

ரிஷிவந்தியம்: கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த தொடர் மழையால் கோமுகி அணையிலிருந்து 1000 கன அடி நீர் ஆற்று வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது. கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் நேற்று முன் தினம் இரவு முதல் பலத்த மழை பெய்து வருகிறது. மழையின் அளவு 15 மி.மி., ஆகும். கல்வராயன்மலையில் பெய்த மழை நீர் முழுவதும் கல்படை ஆறு வழியாக மலை அடிவாரத்தில் உள்ள

கோமுகி அணைக்கு வருகிறது. அணையின் மொத்த கொள்ளளவான 46 அடியில் 44 அடிக்கு(546 மில்லியன் கன அடி) மட்டுமே இருப்பு வைக்க முடியும். அணைக்கு தொடர்ந்து 1000 கன அடிக்கு நீர் வரத்து உள்ளதால் அணையின் பாதுகாப்பு கருதி மெயின் ஷட்டர்கள் மூலம் ஆற்று வழியாக வரத்து நீர் முழுவதும் வெளியேற்றப்படுகிறது. மணிமுக்தா அணையின் மொத்த கொள்ளளவு 36 அடி(736 மில்லியன் அடி) ஆகும். இதில்31 அடிக்கு(425 மில்லியன் கன அடி ) நீர் பிடிப்பு உள்ளது.

## <u>பண்ணை குட்டை மூலம் மீன் வளர்த்து பள்ளிபாளையம் விவசாயி சாதனை</u>

பள்ளிபாளையம் : நூறு நாள் வேலை திட்டத்தில், பள்ளிபாளையம் அருகே உள்ள விவசாயி, பண்ணை குட்டை மூலம், மீன் வளர்த்து சாதனை படைத்து வருகிறார், தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ஆறு, குளம், குட்டை, கண்மாய் உள்ளிட்ட நீராதாரங்கள் தூர்வாரப்படுதல், கிராமப்புற சாலை பாரமரிப்பு உள்ளிட்ட பணிகள் செய்யப்படுகிறது. அதேபோல், தனியார் நிலங்களில், பண்ணைக் குட்டை அமைக்கும் திட்டத்தின்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சிறு விவசாயி, ஐந்து ஏக்கருக்குள்ளும், குறு விவசாயி இரண்டரை ஏக்கருக்குள்ளும், பண்ணை குட்டை அமைக்கலாம்.தனியார் விவசாயிகளின் நிலத்தில், 15 மீட்டர் நீளம், 15 மீட்டர் அகலம் அல்லது, 9 மீட்டர் நீளம், 9 மீட்டர் அகலத்தில், முழு மானியத்தில், 1.5 லட்சம் ரூபாய் மதிப்பில், பண்ணைக் குட்டை அமைத்துத் தரப்படும். அதற்காக, மாவட்ட விவசாயத் துறை சார்பில், தகுதியான விவசாயிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். பண்ணை குட்டையில், மீன் வளர்ப்பு மற்றும் தண்ணீர் சேமிப்பு செய்து விவசாயம் செய்ய முடியும். இந்நிலையில், பள்ளிபாளையம் வட்டாரத்தில், கடந்தாண்டு, பத்து விவசாயிகளுக்கு பண்ணை குட்டை அமைத்த தரப்பட்டது. அதில், பள்ளிபாளையம் அடுத்த பாப்பம்பாளையம், கோம்புமேடு பகுதியை சேர்ந்த விவசாயி பெரியசாமி, 50, பண்ணை குட்டையை பயன்படுத்தி, மீன் வளர்ப்பு செய்து, நல்ல லாபம் ஈட்டும் தொழிலாக நடத்தி வருகிறார். இது குறித்து, விவசாயி பெரியசாமி கூறியதாவது:மாவட்ட ஊரக வளர்ச்சி துறை

சார்பில், பண்ணை குட்டை அமைத்து கொடுத்தனர். குட்டையில் மழைநீரை சேகரித்து, சிறிய அளவில் விவசாயம் செய்து வந்தேன். மேலும், குட்டை நீரை பயன்படுத்தி மீன் வளர்க்கலாம் என முடிவு செய்தேன். அதன்படி, சேலம் மாவட்டம், மேட்டூர் சென்று மீன் வளர்ப்பு துறை அதிகாரியிடம் முறையிட்டேன். அவர்களின் ஆலோசனைப்படி, பத்து மாதத்திற்கு முன்பு, தலா, 25 காசு வீதம், ஆயிரம் மீன் குஞ்சுகளை வாங்கி, பண்ணை குட்டையில் விட்டேன். ஒவ்வொரு மீன் குஞ்சுகளும், தற்போது ஒரு கிலோ முதல் ஐந்து கிலோ வரை வளர்ந்து விட்டது. இன்னும் சில நாட்களில் மீன்கள், விற்பனை வந்துவிடும். ஒரு கிலோ மீன், 130 ரூபாய் விலைக்கு விற்பனை செய்யலாம் என நினைக்கிறேன்.இவ்வாறு, அவர் கூறினார்.

## கி.கிரி மாவட்டத்தில் தொடர் மழை

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று காலை முதல் பரவலாக மழை பெய்ததால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, தமிழகத்தில் பல மாவட்டங்களில், கன மழை பெய்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், நேற்று முன்தினம் இரவு முதல் மழை பெய்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, மாவட்டத்தில் அதிக பட்சமாக ஊத்தங்கரையில், 11 மி.மீ., மழை பதிவானது. கிருஷ்ணகிரி, 5.40 மி.மீ., பெனுகொண்டாபுரம், 5.20 மி.மீ., போச்சம்பள்ளி, 4.20 மி.மீ., சூளகிரி, 4 மி.மீ., மழை அளவு பதிவானது. இந்நிலையில், நேற்று காலை முதல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை பெய்து வந்தது. மழையில் நனைந்தவாறு, மாணவ மாணவியர் பள்ளிகளுக்குச் சென்றனர். மதியம், 2 மணிக்கு மேல் கிருஷ்ணகிரி நகரம் உள்பட மாவட்டத்தில் பல இடங்களில் கன மழை பெய்யத் தொடங்கியது. தொடர் மழையால், பொதுமக்கள் சாலையில் நடமாட முடியாம ல், வீடுகளில் முடங்கினர்.ஊத்தங்கரை சுற்றுவட்டார பகுதி, வானம் பார்த்த பூமியாக உள்ளதால், அங்கு நேற்று முன்தினம் கன மழை பெய்தது. அதனால், அப்பகுதி விவசாயிகள், துவரை, கொள்ளு, பச்சைப்பயறு போன்ற சிறுதானிய பயிர்கள் அதிகம் சாகுபடி

செய்துள்ளதால், மழையால், பயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>சிவகிரியில் அதிகபட்ச மழை பதிவு</u>**

ஈரோடு : ஈரோடு மாவட்டத்தில், மூன்று நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. வங்க கடலில் ஏற்பட்டுள்ள புயல் சின்னத்தால், ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில், சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. சிவகிரியில் அதிகபட்ச மழையளவு பதிவானது. நேற்று, ஈரோடு மாநகரில் காலை முதல் மதியம் வரை, கடுமையான மேக மூட்டம் காணப்பட்டது. அவ்வப்போது லேசான சாரல் மழை பெய்தது.நேற்று காலை 8 மணி நிலவரப்படி, பவானிசாகர்,8 மி.மீட்டர், கொடிவேரி,5, பெருந்துறை,8, பவானி,1.6, ஓலப்பாளையம்,13, புங்கம்பாடி,7, ஈரோடு,10.4, மொடக்குறிச்சி,25, அரச்சலூர்,7, சென்னிமலை,15, சிவகிரி,27, முத்தூர்,5, மங்களப்பட்டி,5, வெள்ளகோவில்,2.6, காங்கேயம்,4.2 மி.மீட்டர் மழை பதிவானது. சில தினங்களாக நின்று போன மழையால், கவலை அடைந்த விவசாயிகள், தற்போது மீண்டும் மழை துவங்கி இருப்பதால், மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>வேளாண் உதவி இயக்குனர் உரக்கடைகளில் ஆய்வு</u>**

வெள்ளகோவில் : வெள்ளகோவில் வட்டாரத்தில் உள்ள உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகளில், வெள்ளகோவில் வட்டார வேளாண் உதவி இயக்குனர் மாணிக்கம் திடீரென ஆய்வு மேற்கொண்டார். உரக்கடை களில் யூரியா உட்பட அனைத்து உரங்களும், தமிழக அரசு நிர்ணயித்து உள்ள விலைக்கு மேல், விற்பனை செய்யக்கூடாது. இருப்பு மற்றும் விற்பனை விலை விபரங்களை, விளம்பரப் பலகையில் கண்டிப்பாக எழுதி வைக்க வேண்டும். ரொக்கப்பட்டில்களில் விவசாயிகளின் முழு விலாசம் எழுதி, கையொப்பம் பெற வேண்டும். படிவம் "ஓ' இல்லாத, அங்கீகாரம் இல்லாத, நிறுவனங்களின் உரங்களை, வாங்கக்கூடாது, என யோசனை தெரிவிக்கப்பட்டது. விவசாயிகளிடம் இருந்து உரங்கள் குறித்த புகார் தரப்படும் பட்சத்தில், உரக்கட்டுப்பாடு சட்டத்தின்படி,

நடவடிக்கை எடுக்கப்படும், எனவும், யூரியா உரத்தை, ஒரே விவசாயிக்கு அதிகப்படியான மூட்டைகளை விற்பனை செய்யக்கூடாது. அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும், என, கடை உரிமையாளரிடம் விளக்கப்பட்டது.வெள்ளகோவில் வேளாண் அலுவலர் ஷாலினி உடனிருந்தார்.

## தேயிலை அறுவடை கவாத்து செய்யும் முறை

ஊட்டி : இயந்திரத்தின் மூலம், தேயிலை அறுவடை மற்றும் கவாத்து செய்யும் முறை குறித்த பயிற்சி, வரும் 17ல் துவங்க உள்ளது. ஊட்டி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: வேளாண்மை பொறியியல் துறை சார்பில், தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தேயிலை அறுவடை இயந்திரத்தின் மூலம், தேயிலை அறுவடை செய்யும் செயல் முறை விளக்கம் நடத்தப்பட உள்ளது. அதன்படி, வரும் 17ம் தேதி, காலை 11:00 மணிக்கு கடநாடு, 18ம் தேதி கீழ் குந்தா கிராமத்தில் செயல் முறை விளக்கம் அளிக்கப்பட உள்ளது. வரும் 18ம் தேதி, காலை 11:00 மணிக்கு, பி.மணியட்டி, மாலை 3:00 மணிக்கு கல்லக்கொரையில், தேயிலை கவாத்து செய்யும் கருவியின் மூலம் தேயிலை கவாத்து செய்யும் செயல் முறை விளக்கம் அளிக்கப்பட உள்ளது. மேலும், விபரங்களுக்கு "0423-2441557' என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அரவக்குறிச்சியில் அதிக மழை முருங்கை விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர்: கரூர் மாவட்டத்தில், அரவக்குறிச்சியில், 21 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இதனால், முருங்கை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கரூர் மாவட்டத்தில் கடந்த, மூன்று நாட்களாக வானம் மேகமூட்டமாகவே காணப்பட்டது. ஆங்காங்கே மழை பெய்தது. நேற்று முன்தினம் முதல் மழை பெய்தது. நேற்றுமுன்தினம் காலை, 8 மணி முதல், நேற்று காலை, 8 மணி வரை கரூர் மாவட்டத்தில் பெய்த மழையளவு விபரம் வருமாறு: கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சியில் அதிகளவாக, 21 மி.மீ, க.பரமத்தியில், 16.40 மி.மீ., குளித்தலையில், 1.10

மி.மீ., மாயனூரில், 1.60 மி.மீ., கரூரில், 9 மி.மீ., அணைப்பாளையத்தில், 12 மி.மீ., பஞ்சப்பட்டியில், 2.40 மி.மீ., கிருஷ்ணராயபுரத்தில், 2.10 மி.மீ., மழைப்பதிவானது. கரூர் மாவட்டத்தில் மொத்தம், 65.60 மி.மீ., மழைப்பதிவாகியுள்ளது. சராசரி 5.47 மி.மீ., கடவூர், பள்ளப்பட்டி, மயிலம்பட்டி, தோகைமலை மழை பதிவாகவில்லை. கரூர் மாவட்டத்தில் பரவலாக மழைப் பதிவாகியுள்ளதால், முருங்கை, வாழை, நெல், வெற்றிலை கம்பு, சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே போல் குளிர்ந்த சூழ்நிலை நிலவுவதால், மக்களும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## <u>விதை கிராம திட்டப் பயிற்சி</u>

கந்தர்வகோட்டை: வேளாண்மை துறை சார்பில், விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயிற்சி முகாம், கந்தர்வகோட்டை அருகேயுள்ள ஒடுகம்பட்டியில் நடந்தது. வேளாண்மை துணை இயக்குநர் சதானந்தம் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். வேளாண்மை உதவி இயக்குநர் சங்கரலெட்சுமி முன்னிலை வகித்தார். விதை கிராமத் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் விதைப் பண்ணை அமைத்து, தரமான விதை உற்பத்தி செய்வதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டது. சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யும் வழிமுறைகள் பற்றியும், துவரை நடவு செயல் விளக்கம், பயிர் காப்பீடு பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

## <u>தஞ்சாவூர் மாவட்டத்தில் 3வது நாளாக மழை</u>

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், 3வது நாளாக நேற்றும் மழை நீடித்தது. மாவட்டம் முழுவதும், 478 மி.மீ., மழை பெய்துள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இரண்டு வார இடைவெளிக்கு பின், கடந்த, 11ம் தேதி துவங்கிய மழை, மூன்றாவது நாளாக நேற்றும் நீடித்தது. அவ்வப்போது பலத்த மழை பெய்துவருவதால், நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகிறது. நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், பம்புசெட்டுகளில், 50 அடி உயரம் வரை தண்ணீர் நிரம்பியுள்ளது. நேற்று (13ம் தேதி) காலை, 8 மணி நிலவரப்படி மாவட்டம் முழுவதும், 478 மி.மீ., மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக

மதுக்கூரில், 94 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. ஆதிராம்பட்டிணம், 32.60, கும்பகோணம், 48, பாபநாசம், 12, தஞ்சாவூர், 8.40, திருவையாறு, 17.30, திருக்காட்டுப்பள்ளி, 8.80, வல்லம், 8, கல்லணை, 5.40, அய்யம்பேட்டை, 14, திருவிடைமருதூர், 48.50, மணலாறு, 30, நெய்வாசல், 8.50, பூதலூர், 23.40, வெட்டிக்காடு, 8.40, ஈச்சன்விடுதி, 10.40, ஒரத்தநாடு, 6.40, பட்டுக்கோட்டை, 43, பேராவூரணி, 7.20, கீழ் அணை, 37, குருங்குளம், 7 மி.மீ., மழை பெய்துள்ளது.

**<u>உலக வங்கி அதிகாரிகள் குழு ஆய்வு! அணைகளை புதுப்பிக்க முடிவு</u>**

பழநி : உலக வங்கி அதிகாரிகள் குழுவினர் பழநியில் உள்ள பாலாறு-பொருந்தலாறு, குதிரையாறு அணைகளை ஆய்வு செய்தனர். திண்டுக்கல் மாவட்டம் நங்காஞ்சி உபகோட்டத்தின் கீழ் பரப்பலாறு, பாலாறு-பொருந்தலாறு, குதிரையாறு, வரதமாநதி, குடகனாறு, நங்காஞ்சியாறு அணைகள் உள்ளன. இதில் பாலாறு-பொருந்தலாறு, குதிரையாறு அணைகள் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை. அவற்றின் ஷட்டர்கள், மின்மோட்டார்களில் அடிக்கடி பழுதுஏற்படுகிறது. மேலும் சுற்றுச்சுவர், தடுப்புகள், மேல்புற பகுதிகள் சேதமடைந்துள்ளன. இந்த அணைகளை புதுப்பிப்பதற்காக திட்டமதிப்பீடு தயார் செய்து சென்னையில் உள்ள அணைகள் பாதுகாப்பு தலைமை பொறியாளர் மூலம் டில்லி உலக வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டிருந்தது. ஆய்வு: உலக வங்கி அணை பாதுகாப்பு நிபுணர் வினோத்குமார் வர்மா, அணை வடிவமைப்பு, பராமரிப்பு நிபுணர் சந்திரசேகர் மாத்தூர் ஆகியோர் பழநியில் உள்ள பாலாறு- பொருந்தலாறு, குதிரையாறு அணைகளை ஆய்வு செய்தனர். மொத்த உயரம், தற்போதைய நீர்இருப்பு, பயன்பெறும் குளங்களின் எண்ணிக்கை, ஷட்டர், மோட்டார்கள், மதகுப்பகுதிகளை பார்வையிட்னர். பழநி கண்காணிப்புபொறியாளர் ஜெயபிரகாஷ், செயற்பொறியாளர் திருச்செந்தில்வேலன், உதவிசெயற் பொறியாளர் முருகன் உடனிருந்தனர். பாலாறு-பொருந்தலாறு அணையை புதுப்பிக்க ரூ.3.98 கோடியும், குதிரையாறு அணைக்கு ரூ.1.40 கோடியும் கேட்டு இரண்டு ஆண்டுகளுக்கு முன் திட்ட மதிப்பீடு அனுப்பியிருந்ததாக பொதுபணித்துறையினர் கூறினர். உலகவங்கி குழு அதிகாரி

வினோத்குமார்வர்மா கூறுகையில்,"நாடுமுழுவதும் உள்ள அணைகளில் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு பணிகளை ஆய்வு செய்து வருகிறோம். தமிழகத்தில் இதுவரை 5 அணைகளை ஆய்வு செய்துள்ளோம். பழநியில் 2 அணைகளை பார்வையிட்டுள்ளோம். அடுத்து அமராவதி அணைக்கு செல்கிறோம். டில்லி சென்றவுடன் அறிக்கைகளை உயர் அதிகாரிகளிடம் சமர்பிப்போம். அவர்கள் ஒப்புதல் வழங்கியவுடன் மாநில அரசிடம் நிதி வழங்கப்படும். அதன்பின்னர் அணையில் நடக்கும் பராமரிப்பு பணிகளை ஆய்வு செய்ய மீண்டும் குழுவினர் வருவார்கள்," என்றார்.

**<u>தாண்டிக்குடியில் மிளகு சாகுபடி பயிற்சி முகாம்</u>**

தாண்டிக்குடி : தாண்டிக்குடி காபி ஆராய்ச்சி நிலையத்தில் நறுமணப் பொருள் வாரிய விரிவாக்கத் துறை சார்பில் மிளகு மற்றும் ஏலக்காய் சாகுபடி வேளாண்தொழில் நுட்ப பயிற்சி முகாம் நடந்தது.கொடைக்கானல் வட்டார ஆத்மா திட்ட விவசாய ஆலோசனைக் குழு தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். வத்தலக்குண்டு நறுமணப் பொருள் வாரிய முதன்மை களப்பணி அலுவலர் சுந்தரேசன் பேசினார். களப்பணி அலுவலர் பென்னி மாத்யூ நன்றி கூறினார். தாண்டிக்குடி, காமனூர், கீழ்மலை பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>மாவட்டத்தில் 30 பண்ணை மகளிர் குழுக்கள் அமைப்பு; வேளாண்மை இணை இயக்குனர்</u>**

சிவகங்கை : "அரசின் பண்ணை மகளிர்திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 30 பண்ணை மகளிர் குழுக்கள் அமைத்துள்ளதாக," வேளாண்மை துறை இணை இயக்குனர் கணேசன் தெரிவித்தார். அவர் கூறியதாவது; வேளாண்மை தொழிலில் ஈடுபட்டுள்ள பண்ணை மகளிரின் சமூக பொருளாதார நிலையினை தொழில்நுட்ப மேலாண்மை உதவியின் மூலம் மேம்படுத்தி அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றி நீடித்த நிலையான பலனை பெற வழிவகை செய்யும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இடுபொருட்கள் உற்பத்தி உள்ளிட்ட விவசாய பணிகள் மற்றும் அறுவடைக்கு பிந்தைய

செயல்பாடுகள் ஆகியவற்றில் மகளிருக்கு பயிற்சி வழங்கி தேவையான கடன் மற்றும் சுழல் நிதி வழங்கப்பட உள்ளது. இதில், வயது 20 முதல் 60க்கு உட்பட்ட திருமணம் ஆன எழுத படிக்க தெரிந்த பிறரை அனுசரித்து செல்லும், சமூக அக்கறை கொண்ட பண்ணை மகளிர் குழுக்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். குழுவில் 20 மகளிர் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் 80 சதவீதம் பேர் விவசாய குடும்பத்தை சேர்ந்தவர்கள், மீதம் 20 சதவீதம் பேர் பிற தொழில் மேற்கொள்ளும் பெண்கள் ஒரே கிராமத்தை சேர்ந்த சிறு, குறு விவசாய பெண்கள் 40 பேர் முதற்கட்டமாக தேர்வு செய்யப்படுவர். வேளாண்மை துறையின் மூலம் அமைக்கப்பட்டுள்ள 18 பண்ணை மகளிர் குழுக்களின் மூலம், தரமான விதை உற்பத்தி, நாட்டுக்கோழி வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல், நாற்று வளர்ப்பு உயிர் உரங்கள் தயாரித்தல், இயந்திரங்கள் வாடகைக்கு விடுதல் மற்றும் கால்நடை வளர்ப்பு தொழில்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. துறை சார்பில் வழங்கும் அனைத்து மானிய திட்டங்களும் இக்குழுவினருக்கு வழங்கப்படும். குழு வாரியாக மேற்கொள்ளப்பட உள்ள தொழில் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்டு தொழில் தொடங்க வங்கி கடன் ஏற்பாடு செய்யப்படும். மேலும் சுழற்நிதியாக குழுவிற்கு ரூ.10 ஆயிரம் வழங்கப்படும், என்றார்.

## <u>பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>

நாகர்கோவில் : குமரி மாவட்டம் முழுவதும் வடகிழக்கு பருவமழை கடந்த 15 நாட்களாக பெய்து வருகிறது. புத்தன் அணை, குளச்சல், குருந்தன் கோடு, சுருளோடு, கன்னிமார், கொட்டாரம், இரணியல் பகுதிகளில் 12.11.2014 அன்று 1 மணி நேரம் இடைவிடாது பலத்த மழை கொட்டி தீர்த்தது.பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணை பகுதிகளிலும் சாரல் மழை பெய்து வருவதால் அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து அதிகரித்துள்ளது. அணைகளில் இருந்து பாசனத்திற்கேற்ப சானல்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணை 44.60 அடியை எட்டியது. அணைக்கு வினாடிக்கு

483 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 381 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 69.05 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 408 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 350 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.மாம்பழத்துறையாறு, பொய்கை அணைகள் நிரம்பி வழிகின்றன. அணைகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். பாசன குளங்களும் நிரம்பி வருகின்றன.இதுவரை 1,500-க்கும் மேற்பட்ட குளங்கள் முழு கொள்ளளவை எட்டி உள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**முட்டை விலை உயர்வு : 351 காசாக நிர்ணயம்**



நாமக்கல்: முட்டை விலை 351 காசுகளாக உயர்ந்துள்ளது. கடந்த 2 வாரங்களில் 26 காசுகள் வரை விலை அதிகரித்துள்ளதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். 'தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு' கூட்டம் நாமக்கல்லில் நேற்று நடந் தது. இதில், பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்று முட்டை உற்பத்தி, விற்பனை நிலவரம் பற்றி ஆலோசித்தனர். முட்டை விலையில் 11 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 351 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. வடமாநிலங்களில் குளிர் அதிகரித்துள்ளதால் அங்கு முட்டையின் தேவை

அதிகரித்துள்ளது. நாமக்கல் மண்டலத்தில் இருந்து அதிகப்படியான முட்டைகள் வடமாநிலம் செல்கிறது. மேலும், தமிழகம், கேரளாவிலும் விற்பனை அதிகரித்துள்ளதால் முட்டை விலை உயர்ந்துள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தார். கடந்த இரு வாரங்களில், முட்டை விலை 26 காசுகள் வரை அதிகரித்துள்ளதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முட்டையின் உற்பத்தி செலவை காட்டிலும், விற்பனை விலை உயர்ந்து வருவதால், சிறு பண்ணையாளர்களும் லாபம் அடைந்து வருகின்றனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ர்ீ66 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ர்ீ75 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்): பெங்களூரு, 370, சென்னை, 375, மைசூர், 363, ஐதராபாத், 357, மும்பை, 397, விஜயவாடா, 349, கொல்கத்தா, 395, பர்வாலா, 368, டெல்லி, 385 காசுகள்.

<u>**புதன் சந்தையில் கறவை மாடுகளின் விலை உயர்வு**</u>

சேந்தமங்கலம் : நாமக்கல் மாவட்டம், புதன் சந்தையில் வாரந்தோறும் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய நாட்களில் அதிகாலை முதல் மதியம் வரை மாட்டுச்சந்தை நடைபெறுவது வழக்கம். இச்சந்தைக்கு கர்நாடகா, ஆந்திரா, கேரளா, பொள்ளாச்சி, சேலம், ஈரோடு, கோவை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வியாபாரி கள் மாடுகளை வாங்குவதற்காக வருகின்றனர். இந்நிலையில் நேற்றுக் கூடிய மாட்டுச் சந்தையில், சுற்றுப்பகுதியிலிருந்து குறைந்த அளவே இறைச்சி மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. மேலும் கேரளாவில் இருந்து வியாபாரிகள் குறைந்த அளவே வந்திருந்தனர். தற்போது போதிய மழை பெய்து உள்ளதால் தீவன புல் அதிக அளவில் கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் மாடுகளை விற்க முன்வரவில்லை. இதனால் கடந்த வாரம் ரூ13 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சி மாடு நேற்று ரூ12 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. விவசாயிகள் பால் உற்பத்தி பெருக்க கறவை மாடுகளை வாங்குவதால் அதன் விலை உயர்ந்தது. கடந்த வாரம் ரூ33 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு நேற்று ரூ35 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. கடந்த வாரம் ரூ6 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டிகள் நேற்று ரூ8 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது.

# <u>கோம்பை புதுக்குளத்திற்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு</u>

தேவாரம், :கோம்பை புதுக்குளத்திற்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கோம்பை மலையடிவாரத்தில் அதிகளவில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு மழை பெய்தது. இதனால் இங்குள்ள காட்டாற்று ஓடைகளில் அதிகமான அளவில் தண்ணீர் வரத்து காணப்பட்டது. தற்போது 18ம் கால்வாயில் இருந்து திறக்கப்படும் தண்ணீர், பலத்த மழை காரணமாக காட்டாற்று ஓடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து கோம்பை புதுக்குளம் உள்ளிட்ட கண்மாய்களுக்கு செல்கிறது. இப்பகுதியில் பரவலாக பெய்த பருவமழையால் கோம்பை, தேவாரம் பகுதிகளில் உள்ள மானாவாரி விவசாயிகள் தங்களது நிலங்களை உழுது  தக்காளி, மொச்சை, எள், சோளம், உள்ளிட்ட பயிர்களை விதைத்துள்ளனர். மழையின் காரணமாக அதிகளவில் நிலங்கள் ஈரத்தன்மை  அடைந்துள்ளதால் கருகிய பயிர்களும் உயிர் பெற்று பசுமையாக காட்சியளிக்கின்றன. கோம்பை புதுக்குளம், தேவாரம் பெரியதேவி, தே.ரெங்கநாதபுரம்  சின்னதேவி யம்மன், பண்ணைப்புரம் காமாட்சியம்மன் குளம் உள்ளிட்ட குளங்களுக்கு அதிகளவில் தண்ணீர் வரத்து உண்டாகி உள்ளதால் நிலத்தடி  நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. தோட்டங்களில் வறண்டு கிடக்கும் கிணறுகளிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. விவசாயிகள் கூறுகையில், �வடகிழக்கு பருவமழை தொடரும் பட்சத்தில் கால்வாய்களின் வழியாக மழைநீர் அதிகமாக வரும். 18ம் கால்வாய் தண்ணீரும் சேர்ந்து வருவதால் எல்லா குளங்களும் நிரம்பக்கூடிய நிலை உண்டாகும். முன்னதாகவே கால்வாய்களை தூர்வாரி இருந்தால் தற்போது  நிரம்பும் தண்ணீரால் 6 மாதத்திற்கு பிரச்னை ஏற்படாது. அதிகாரிகளின் அலட்சியத்தால் பல குளங்கள் நிரம்பி உள்ளன. குளப்பகுதியில் உள்ள நீரை  அதிகளவு உறிஞ்சும் தன்மை கொண்ட கருவேல மரங்கள், மற்றும் செடிகளால் தண்ணீர் வற்றக்கூடிய ஆபத்து உள்ளது� என்றனர்.

<u>மானாவாரியில் பருத்தி பயிரிடும் முறை வேளாண்துறை ஆலோசனை</u>

பழநி, : மானாவாரியில் பருத்தி பயிரிடும் முறை குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். மானாவாரியில் பருத்தி பயிரிட எல்.ஆர்.ஏ- 5166, சுமங்கலா, கே-11, எஸ்.வி.பி. ஆர்-2, கே.சி-2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். 45*15 சென்டிமீட்டர் இடைவெளியில் பார்கள் அமைத்து எக்டேருக்கு 15 கிலோ என்ற அளவில் விதைக்க வேண்டும். பஞ்சு நீக்கிய விதையு டன் 3 கிராம் பாலி கோட், கார்பன்டைசிம் 2 கிராம், இமிடர்குளோபரிட் 7 கிராம், சூடா மோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 10 கிராம், அசோபாஸ் 40 கிராம் கலந்து விதைப்பதால் விதைத்த 45வது நாள் வரை சாறு உறிஞ்சும் பூச்சிகளி லிருந்து பயிரினை காத்து ஆரம்பத்தில் நல்பயிர் வளர்ச்சி அடைய முடியும். நுண் ஊட்டச்சத்தாக எக்டேருக்கு சிங்க் சல்பேட் 50 கிலோ அடியுரமாக அளிப்பதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்கிறது. பயிரின் வயது 150 நாட்களுக்குள் இருக்கும்போது, 60 கிலோ தழைச்சத்து இட வேண்டும். 150 நாட்களுக்கு மேல் ஆகும்போது தழைச்சத்து 80 கிலோவிற்கு மேல் இட வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு தழைச்சத்து 120 கிலோ இட வேண்டும். மேற்காணும் உரத்தில் மணிச்சத்து முழுவதும் மற்றும் தழைச்சத்து, சாம் பல் சத்தினை பாதி அடியுரமாகவும் இட வேண்டும். களை முளைப்பதற்கு முன் ப்ளூகுளோரலின் 2.2 லிட்டர் அல்லது பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளி த்து கட்டுப்படுத்த வேண்டும். உயிர் உரமாக 2 ஆயி ரம் கிராம் அசோஸ்பரில்லத்துடன் 2 ஆயிரம் கிராம் பாஸ்போ பாக் டீரியா இட வேண்டும். ரசாயன உரங்களாக இருந் தால் மண் பரிசோதனை செய்து மண் வள அட்டை பெற்ற பின்பு உரமிட வேண்டும். பரிசோ தனை செய்யாத நிலங்களு க்குகளை முளைப்பதற்கு முன் ப்ளூகுளோராலின் 2.2 லிட்டர், பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். அடி உரமாக எக்டேரு க்கு 50 கிலோ சிங்க் சல் பேட் அளித்தால் நுண் ஊட்ட சத்து அளிக்க வேண்டும்.

இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ அல்லது பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை யோ தொடர்பு கொள்ள லாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## பருத்தியில் பச்சை தத்துப்பூச்சி, இலைப்புள்ளி தாக்குதல் கட்டுப் படுத்துவது எப்படி?வேளாண் அதிகாரி விளக்கம்

பெரம்பலூர்: பருத்தியில் பச்சைத் தத்துப்பூச்சி, இலைப்புள்ளி நோய்தாக்குதல். வேளாண்மைத் துறையினர் யோசனைப்படி உரிய மருந்துகளைத் தெளித்து, பயிர்களைக் காப்பாற்றலாம் என வேளாண் உதவிஇயக்குநர் சேகர் தெரிவித்துள்ளார். பெரம்பலூர் வட்டாரத்திலுள்ள கவுல்பாளையம் கிராமத்தில் வேங்கடபதி(44) என்ற விவசாயியின் பருத்தி வயலில் வேளாண்துறை உதவிஇயக்குநர் சேகர் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது : பருத்தி பயிர், மானாவாரி சாகுபடிக்கு மிகவும் உகந்த பயிராகும். பெரம்பலூர் வட்டாரத்தில் 5800 ஏக்கர் பரப்பளவில் இப்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. பெரம்பலூர் வட்டாரத்தில் குறிப்பாக மிக நீண்டஇலைப் பருத்தி ரகங்களான எம்ஆர்சி 6918, எம்ஆர்சி-7918, நீண்டஇலைப் பருத்தி ரகங்களான ஆர்சிஎச்2, ஆர்சிஎச்20, ஆஷா, ஜாக்பாட், ஜாது, சைதன்யா போன்ற ரகங்கள் பயிரிடப் படுகின்றன.மழையை மட்டுமே நீராதாரமாகக் கொண்டு பயிரிடப்படும் பருத்திப்பயிர் சாகுபடிக்கு இந்த ஆண்டு சரியான தருணங்களில் மழை பெய்துள்ளதால் பயிரின் வளர்ச்சி நன்றாக உள்ளது. எனினும் தற்போதைய குளிர் சீதோஷ்ண நிலையால் பல்வேறு நோய்தாக்குதல் மற்றும் பூச்சிகளின் தாக்குதல்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. பருத்திப் பயிரில் தற்போதைய சீதோஷ்ண நிலையால் ஆல்டர்னேரியா இலைப் புள்ளிநோய் எனப்படும் பூசான நோய் தாக்குதல் ஆங்காங்கே காணப்படுகிறது. இந் நோய் பாதிக்கப்பட்ட இலைகளில் வெளிர்பழுப்பு நிறத்தில் வட்ட வடிவத்தையோ, ஒழுங்கற்ற வடிவத்தையோ கொண்ட சிறுசிறு புள்ளிகள் தோன்றுகின்றன. புள்ளிகளில் அடுக்குஅடுக்காக ஒன்றன் மேல் ஒன்றான வளையங்கள் இருப்பது போன்ற தோற்றம்

காணப்படும். இறுதியில் பாதிக்கப்பட்ட இலை முழுவதும் இப்புள்ளிகள் பரவி காய்ந்து, இலைகள் உதிர்ந்து விடுகின்றன. இதே போன்று பேக்டீரியக் கருகல் நோயும் இந்தத் தருணத்தில் தென்பட வாய்ப்புள்ளது. பருத்தி இலைகளின் அடிப்பாகத்தில் நீர் ஊறிய சிறுபுள்ளிகள் போன்று இந்நோய்க்கான அறிகுறிகள் தோன்றி, நாளடைவில் விரிவடைகின்றன. நீர்க்கசிவு நாளடைவில் கருநிறமடைவதால் நரம்புகள் கருநிறமாக காணப்படுகின்றன. மேலும் இந்நோய் பருத்தி காய்களிலும் தாக்குதலை ஏற்படுத்தி சேதம் விளைவிக் கிறது. இந்த நோய்களை கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு 30 கிராம் மற்றும் ஸ்டிப்டோமசின் சல்பேட் ஒருகிராம் வீதம் 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். தற்போது பயிரிடப்பட்டுள்ள பருத்திப்பயிர்கள் அனைத்தும் பிடி ரகங்களைச் சேர்ந்தது என்பதால் இவற்றில் காய்ப்புழுக்களின் தாக்குதல் வெகுவாகக் கட்டுப்படுத்தப் பட்ட நிலையில், தற்போது சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் அதிகம் தென்படுகிறது. ஈ, பச்சைத் தத்துப்பூச்சி, அசுவினி போன்றப் பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் சுருண்டு, தீயில் வாடியது போல் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன. இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த தயோமீத்தாக்சிம் 4 கிராம் அல்லது அசிட்டாமபிரைடு 10 கிராம் அல்லது பிப்ரோனில் 25 மிலி வீதம் 10லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். குறிப்பாக பருத்தி பயிர்சாகுபடி விவசாயிகள் பயிர்களில் காணப்படும் பூச்சிகள், நோய்களின் தாக்குதல்களை வேளாண்துறை அலுவலர்களின் யோசனைப்படி மருந்து தெளித்து பயிர்களைக் காப்பாற்றலாம் எனத்தெரிவித்தார். நிகழ்ச்சியின் போது வேளாண்அலுவலர் ரமேஷ், உதவி வேளாண்அலுவலர் இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>உணவு பாதுகாப்பு முட்டுக்கட்டைக்கு தீர்வு இந்தியா–அமெரிக்கா இடையே உடன்பாடு மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் தகவல்</u>



புதுடெல்லி, உணவு பாதுகாப்பு முட்டுக்கட்டைக்கு தீர்வு காண்பது தொடர்பாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டு இருப்பதாக மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<u>உணவு பாதுகாப்பு</u>

உலக வர்த்தக அமைப்பில் உணவு பாதுகாப்பு மற்றும் மானியங்கள் வழங்குவது தொடர்பாக உறுப்பு நாடுகளிடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. இந்தியா போன்ற வளரும் நாடுகள் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு உணவுப்பொருட்களுக்கு மானியம் வழங்குவதற்கும், உணவுப்பொருட்களை சேமித்து வைப்பதற்கும் அமெரிக்கா போன்ற சில நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தது. இதனால் உலக வர்த்தக அமைப்பில் உணவு பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்து ஆவதில் முட்டுக்கட்டை நீடித்து வநதது.

<u>இந்தியா–அமெரிக்கா உடன்பாடு</u>

இந்த நிலையில், இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு உள்ளது. இந்த தகவலை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை ராஜாங்க மந்திரி நிர்மலா

சீதாராமன் நேற்று டெல்லியில் நிருபர்களிடம் தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

இந்திய விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவுப்பொருட்களை சேமித்து வைப்பது தொடர்பாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி உடன்பாடு ஏற்பட்டு உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி கடந்த செப்டம்பர் மாதம் மேற்கொண்ட அமெரிக்க சுற்றுப்பயணத்தை தொடர்ந்து, இந்த பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாட்டை அமெரிக்கா புரிந்து கொண்டு உள்ளது.

<u>வர்த்தக ஒப்பந்தம்</u>

உலக வர்த்தக அமைப்பில், உணவுப் பொருட்களை சேமித்து வைப்பது குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டில் உள்ள நியாயத்தை பல உறுப்பு நாடுகள் ஏற்கனவே புரிந்து கொண்டு ஆதரவு தெரிவித்த நிலையில், இப்போது அதை வரவேற்று அமெரிக்காவும் பகிரங்கமாக ஆதரவு தெரிவித்து இருக்கிறது. உலக அளவிலான பல்முனை வர்த்தக நடவடிக்கைகளை இந்தியா எப்போதும் ஆதரித்து வருகிறது. அதற்கு ஒருபோதும் தடங்கல்களை ஏற்படுத்தியது கிடையாது. நமது விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே உலக வர்த்தக அமைப்பில் இந்தியா தனது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்துகிறது. பாலி உடன்படிக்கை சிறப்பானது அல்ல என்பதாலேயே இந்தியா தனது கவலைகளை தெரிவித்து அதில் திருத்தம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியது. உணவு பாதுகாப்பு பிரச்சினையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டு இருப்பதால், உலக வர்த்தக அமைப்பில் பல மாதங்களாக நிலுவையில் இருக்கும் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கும், அதை செயல்படுத்துவதற்கும் வழிவகை ஏற்பட்டு உள்ளது. இவ்வாறு நிர்மலா சீதாராமன் கூறினார்.

<u>அமெரிக்க வர்த்தக பிரதிநிதி</u>

உணவு பாதுகாப்பு பிரச்சினையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உடன்பாடு ஏற்பட்டு இருப்பதை அமெரிக்க வர்த்தக பிரதிநிதி மைக்கேல் புரோமன் வாஷிங்டன் நகரில் நிருபர்களிடம் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை தொடர்ந்து, உலக அளவிலான வர்த்தகத்தை மேம்படுத்தும் வகையில் பாலி ஒப்பந்தத்தை

முன்னெடுத்து செல்வதில் இருந்து வந்த முட்டுக்கட்டை நீங்கி இருப்பதாக அப்போது அவர் கூறினார்.


**விவசாயிகள் பயிர்காப்பீடு செய்ய நாளை கடைசி நாள் அதிகாரி தகவல்**

விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய நாளை கடைசி நாள் என்று அதிகாரி தெரிவித்துள்ளார்.

பயிர்காப்பீடு

திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகனன் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:- நடப்பாண்டில் சம்பா மற்றும் தாளடி பருவங்களில் சாகுபடி செய்துள்ள நெற்பயிரை தேசிய வேளாண்மை காப்பீடு திட்டத்தின் கீழ், கடன் பெறாத விவசாயிகளுக்கு நாளை (சனிக்கிழமை) கடைசி நாளாகும். இதன் மூலம் இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும் போதும் பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் பட்சத்தில் இழப்பீடு கிடைக்கும். கடன் பெறாத பெரிய விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.12 ஆயிரத்து 800-க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியத் தொகையாக ரூ.128 செலுத்த வேண்டும். கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.12 ஆயிரத்து 800-க்கு இன்சூரன்ஸ் செய்ய, பிரிமியத் தொகையாக ரூ.115 செலுத்த வேண்டும். இதில் அரசு 50 சதவீதம் தொகையினை கடன் பெறாத விவசாயிகளுக்கு மானியமாகவும், 55 சதவீதம் தொகையினை கடன் பெறாத விவசாயிகளுக்கு மானியமாகவும் வழங்குகிறது. கூடுதலாக ஏக்கருக்கு ரூ.11 ஆயிரத்து 200-க்கு இன்சூரன்ஸ் செய்ய விரும்பும் கடன் பெறாத விவசாயிகள் கூடுதல் பிரிமியமாக ரூ.2 ஆயிரத்து 688 தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம். பயிர்கடன் பெறாத விவசாயிகள் சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று முன்மொழிவு படிவத்துடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலோ அல்லது சேவைப் பகுதி வணிக வங்கிகளிலோ தங்களின் பிரிமியத் தொகையை செலுத்தலாம். முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது வணிக வங்கிகளிலோ பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<u>பலத்த மழையால் பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு</u>



ஊத்துக்கோட்டை, பலத்த மழையால் பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

<u>தண்ணீர் திறப்பு</u>

ஊத்துக்கோட்டை அருகே உள்ள பூண்டியில் சத்தியமூர்த்தி நீர் தேக்கம் உள்ளது. இங்கு கிருஷ்ணா நதி நீர் மற்றும் மழை நீர் சேமித்து வைக்கப் படுகிறது. தேவைப்படும் போது பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு சென்னையில் குழாய்கள் மூலம் குடிநீர் வினியோகிப்பது வழக்கம். பூண்டி நீர் தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்ததால் ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விடும்படி தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து கடந்த மாதம் 14–ந் தேதி மாலை தண்ணீர் திறக்கப்பட்டது. வினாடிக்கு 1000 கனஅடி வீதம் கிருஷ்ணா கால்வாயில் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதில் பூண்டி ஏரிக்கு வினாடிக்கு சராசரியாக 100 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

<u>பலத்த மழை</u>

இதனிடையே கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்து வருவதால் பூண்டி ஏரிக்கு கிருஷ்ணா நதி நீர் மற்றும் மழை நீர் வரத்து அதிகரித்து உள்ளது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. நேற்று மாலை 6 மணிக்கு 20.87 அடி தண்ணீர் மட்டம் பதிவானது. 334 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு கிருஷ்ணா நதி நீர் வினாடிக்கு 180 கனஅடி வீதமும், மழை நீர் வினாடிக்கு 815 கனஅடி வீதம் ஆக மொத்தம் 995 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு வினாடிக்கு 200 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த மாதம் 14–ந் தேதி பூண்டி ஏரியில் நீர் மட்டம்

18.65 அடியாகவும், வெறும் 148 மில்லியன் கனஅடி நீர் மட்டும் இருப்பு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

<u>**மாவட்டம் முழுவதும் பலத்த மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**</u>



விழுப்புரம் மாவட்டம் முழுவதும் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் கோமுகி, வீடூர் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. பள்ளிகளுக்கு விடுமுறை அந்தமானுக்கும், இலங்கைக்கும் இடையே வங்கக் கடலில் உருவாகி உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக மழை பெய்தது. விழுப்புரத்தில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை விட்டு, விட்டு மழை பெய்தது, பின்னர் நள்ளிரவு 12 மணி முதல் விடிய, விடிய மழை பெய்தது. நேற்றும் அதிகாலையில் இருந்து மாலை வரை மழை தூறிக்கொண்டே இருந்தது, அவ்வப்போது பலத்தமழை பெய்தது. இந்த தொடர் மழையினால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது, இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் நேற்று விடுமுறை விடப்பட்டது. கலெக்டர் பார்வையிட்டார். விழுப்புரம் திரு.வி.க. வீதி, பாகர்ஷா வீதி, எம்.ஜி. வீதி, கே.கே. சாலை, மணி நகர், சுதாகர் நகர் உள்ளிட்ட பகுதிகளில் குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்தது. விழுப்புரம் புதிய பஸ் நிலையத்தில் குளம் போல் மழைநீர் தேங்கியதால் பயணிகள் அவதிப்பட்டனர். கீழ்ப்பெரும்பாக்கம் ரெயில்வே சுரங்கப்பாதையிலும் தண்ணீர் தேங்கிநின்றது. விழுப்புரம் புதிய பஸ் நிலையத்தையும், கீழ்ப்பெரும்பாக்கம் ரெயில்வே சுரங்கப்பாதையையும் பார்வையிட்ட கலெக்டர் சம்பத், அங்கு தேங்கியிருந்த மழைநீரை வெளியேற்ற அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கள்ளக்குறிச்சி திண்டிவனம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மழை பெய்தது, இரவிலும் அவ்வப்போது விட்டு விட்டு மழை தூறிக்கொண்டே

இருந்தது. நேற்று காலையிலும் விட்டு, விட்டு மழை பெய்தது. இதனால் திண்டிவனம் வகாப் நகர், இந்திராகாந்தி நகர், கிடங்கல் உள்பட பல்வேறு இடங்களில் உள்ள குடியிருப்புகளை தண்ணீர் சூழ்ந்தது. திண்டிவனம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் விவசாயிகள் நடவு செய்திருந்த சம்பா பருவ நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. கள்ளக்குறிச்சி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு சாரலுடன் பெய்யத்தொடங்கிய மழை விடிய, விடிய பெய்தது. நேற்று காலை முதல் மதியம் வரை தொடர்ந்து சாரல் மழை தூறிக் கொண்டே இருந்தது. இதனால் பொதுமக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கி கிடந்ததால் சாலைகள் ஆட்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது. இதேபோல் சங்கராபுரம், சின்னசேலம், கல்வராயன்மலை, தியாகதுருகம் போன்ற பகுதிகளிலும் நேற்று முன்தினம் தொடங்கிய மழை 2-வது நாளாக நேற்று மாலை வரை பெய்ததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. கல்வராயன்மலை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக காட்டாறுகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதால் கோமுகி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. எனவே கோமுகி அணையின் பாதுகாப்பு கருதி பிரதான மதகு வழியாக தண்ணீரை பொதுப்பணித்துறையினர் திறந்து விட்டனர். அந்த தண்ணீர் ஆற்றில் பெருக்கெடுத்து ஓடியது. அணைகளில் நீர்மட்டம் உயர்வு உளுந்தூர்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் செங்குறிச்சி சுங்க வரிச்சாவடியில் நடைபெற்று வந்த சாலை சீரமைப்பு பணிகள் முடங்கின. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். மேலும் உளுந்தூர்பேட்டையை அடுத்த கிழக்குமருதூர் மற்றும் செங்குறிச்சி ஆகிய கிராமங்களில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். திருவெண்ணெய்நல்லூரிலும் கடந்த 2 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதில் திருவெண்ணெய்நல்லூர் கிளை நூலகத்தினுள் மழைதண்ணீர் ஒழுகியதால் புத்தகங்கள் நனைந்து வீணானது. இதேபோல் விக்கிரவாண்டி, திருக்கோவிலூர், வானூர், மரக்காணம், கோட்டக்குப்பம் உள்பட மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் மழை பெய்தது.

இதனால் ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. அதுபோல் வீடூர் அணை, மணிமுக்தா அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## <u>முல்லைப்பெரியாறு அணை 139½ அடியை எட்டியது நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லை</u>



முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வந்தது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 139.30 அடியாக உயர்ந்தது. தொடர்ந்து அணைக்கு நீர்வரத்து காணப்பட்டது. இதனால் நேற்று மாலை 4 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 139.60 அடியாக இருந்தது. நீர்வரத்து வினாடிக்கு 1,338 கனஅடியாக இருந்தது. அணையில் இருந்து 456 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணையில் நீர் இருப்பு 7 ஆயிரம் மில்லியன் கனஅடியாக உள்ளது. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நேற்று மழை பெய்யவில்லை. வைகை அணையின் நீர்மட்டம் 51.05 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 556 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,760 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டது. அணையில் 2,133 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது. தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை பதிவாகியுள்ள மழையளவு விவரம் வருமாறு:– (மில்லி மீட்டரில்)